

திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி , திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட ஒன்றியங்கள் மற்றும் மாநகர பகுதிகளில் த.வெ.க கட்சியிலிருந்து கபிலன் காமேஷ் ஆகியோர் தலைமையில் விலகி, மாவட்ட தி.மு.க. மாணவரணி அமைப்பாளர் முத்து வெங்கடேஷ் ஏற்பாட்டில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்ட இளைஞர்களை பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கீரனூர் உத்தமநாத சுவாமி உடனுறை பிரஹதம்பாள் திருக்கோயில் தேர் திருவிழாவில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று முன்தினம் (08.06.2025) கலந்துகொண்டு, தேரினை வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தார். உடன், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், கீரனூர் பேரூராட்சித் தலைவர் திருமதி.த.ஜெயமீரா ரவிக்குமார், செயல் அலுவலர் (திருக்கோயில்கள்) முத்துராமன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் 3.46 கோடி மகளிர் பயணம்!

## விடியல் பயணம் திட்டம் தந்த முதல்வருக்கு பெண்கள் நன்றி!





பெரம்பலூர், ஜூன் 10 - விடியல் பயணம் திட்டம்தந்த முதலமைச்சருக்கு பெண்கள் மனமார்ந்த நன்றி தெரவித்தனர். பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் விடியல் பயணம் திட்டத்தின் மூலம் 3.46 கோடி மகளிர் பேருந்தில் பயணம் செய்துள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன் கையெழுத்திட்ட முக்கியத் திட்டங்களுள் ஒன்று மகளிர் விடியல் பயணம் திட்டம். திராவிட மாடல் ஆட்சியில் மகளிர் முன்னேற்றத்திற்காகவும், பொருளாதார ரீதியாக மகளிர் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளவும் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம் என எண்ணிலடங்கா திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. அவற்றுள் குறிப்பிடத்தக்க திட்டம் மகளிர் விடியல் பயணம் திட்டம்.

பெண்களின் மிகுந்த வரவேற்பை மட்டுமல்லாது, இந்திய அளவில் அனைத்து மாநிலங்களையும் திருப்பிப்பார்க்க வைத்த திட்டம் என்றால் அது மிகையல்ல.

விடியல் பயணம் திட்டம் மகளிருக்காக செயல்படுத்தப்பட்டாலும், மாற்றுத்திறனாளிகள் அவர்களுடன் வரும் உதவியாளர்கள், திருநங்கைகள் உள்ளிட்ட பிரிவினருக்கும் இலவசப் பேருந்து பயணத்தை இத்திட்டம் உறுதி செய்கின்றது,

இத்தகு சிறப்பு வாய்ந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட நாள் முதல் தற்போது வரை பெரம்பலூர் மாவட்டத்தில் 3,46,29,219 மகளிர் விடியல் பணம் திட்டத்தில் பயனடைந்துள்ளனர். மேலும், 3,46,528 மாற்றுத்திறனாளிகளும், 14,010 மாற்றுத்திறனாளி உதவியாளர்களும், 17,811 திருநங்கைகளும் என மொத்தம் 3,50,27,566 நபர்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

விடியல் பயணம் திட்டத்தில் பயனடைந்த மகளிர் ஒவ்வொருவரும் இத்திட்டத்தை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் பெரம்பலூர் மாவட்டம் சின்னவெண்மணி கிராமத்தைச்சேரந்த திருமதி ஜெகதீஸ்வரி தெரிவிக்கையில்,

என்னைப் போன்ற ஏழை எளிய விட்டுப் பெண்கள் மாத முழுவதும் இலவசமாக பயணம் செய்யும் வகையில் முதல மைச்சர் ஐயா அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள விடியில் பயணம் திட்டம் மிகவுமம் பயனுள்ளதாக இருக்கிறது. இதன் மூலம் ஒவ்வொரு மாதமும் பேருந்து பயணத்திற்காக செலவிடப்படும் தொகை மிச்சப்படுத்தப்படுகின்றது. அது மட்டுமல்லாது கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் நான் பயன் பெற்று வருகிறேன். இதுபோன்ற திட்டங்கள் எங்களின் குடும்ப வாழ்வாதாரத்திற்கு பெரிதும் பயனுள்ள வகையில் இருக்கிறது.

பெண்களின் வாழ்வாதாரத்தை மையப்படுத்தி இதுபோன்றதிட்டங்களை தொடர்ந்து வழங்கி வரும் நாள் முழுதும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைத்து மகளிர் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் போக்குவரத்து துறையின் சார்பில் பெரம்பலூர் மாவட்டத்தில்

16 நகர்ப்புற பேருந்துகள், 21 புறநகர் பேருந்துகள் என மொத்தம் 37 புதிய பேருந்துகள் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 12 பேருந்துகள் வழித்தடம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 29 பேருந்துகள் கூடுதல் நடைகளாக இயக்கப்படுகின்றது. குன்னத்தில் புதிய பேருந்து பணிமனை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### தங்கவயல் தி.மு.க. சார்பில்

# இராபர்ட்சன் பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## வழக்கறிஞர் டேவிட் தலைமையில் நடைபெற்றது!

தங்கவயல், ஜூன் 10 - தமிழர்களின் வாழ்வுரிமைக்காக போராட்டம் நடத்திய கலைஞரியின் வாழ்க்கை பிறந்தது முதல் இறந்தது வரை போராட்டமாகவே இருந்தது என்று தங்கவயல் நகர தி.மு.க. புகழாரம் சூட்டியது.

தங்கவயல் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கலைஞரியின் 102 வது பிறந்த நாள் விழா இராபர்ட்சன்பேட்டை, பி ரிச்சர்ட் சாலையில் உள்ள கழக அலுவலகமாக கலைஞரகத்தில் வழக்கறிஞர் டேவிட் தலைமையில், சீனிவாசன், ஜீவானந்தம், டிரைவர் ரவி ஆகியோர் முன்னிலையில் நடந்தது. பொறுப்புக்குழு உறுப்பினர் நாத்திகம் என்.எஸ். ஸ்ரீதர் உரையாற்றினார்.

கழக கொடியை மூத்த உறுப்பினர் விஸ்வநாதன் ஏற்றினார். கலைஞர் திருவுருவ படத்திற்கு முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் கு.ஆதித்தன் மாலை அணிவித்தார். பொற்செழியன், ஏ.வீ.இளங்கோவன் ஆகியோர் இனிப்பு வழங்கினர். வி.கார்த்திக் வரவேற்றார். குமார் நன்றி கூறி னார்.

நிகழ்ச்சியில் கீழ்காணும் தீர்மானங்களை ஆ. கரிகாலவளவன் வாசித்தார்.

1. பெரியார் சிந்தனையாளரும், பகுத்தறிவாளரும் பேராசிரியர் கு.வணங்காமுடி மற்றும் தங்கவயல் கழக மூத்த உறுப்பினர் சி. சேகரன் ஆகியோர் மறைவுக்குப் இரங்கல் தெரிவிக்கப்பட்டது

2. முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3 ம் தேதியை செம்மொழி நாளாக அறிவித்தது செயல்படுத்திய தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கும் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

3. தலைமைக் கழக துணை பொதுச் செயலாளராக கழக மாநிலங்களவை தலைவர் திருச்சி என்.சிவா நியமனம் செய்துள்ளதை மகிழ்ச்சியாக வரவேற்கிறோம் என்பது உள்பட 5 தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டது.

அதை தொடர்ந்து கழக பொறுப்பு குழு உறுப்பினர் நாத்திகம் என்.எஸ்.சிறிதர் பேசும்போது, கலைஞர் தனது வாழ்நாளை தமிழ், தமிழர் நலன் ஆகியவைக்கு அர்பணித்தார். அவர் ஆட்சி அரியணையில் அமராமல் இருந்திருந்தால் தமிழினம் எப்படி திரைமாறி போய் இருக்கும் தெரியாது.

போராட்டம் ஒன்றே கலைஞரியின் வாழ்க்கையில் ஒன்றிபோய் இருந்தது. அவர் பிறந்தது முதல் இறந்தபின் மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணாவின் சமாதி அருகில் துயில் கொள்ளும் வரை போராட்டம் நடத்தினார். அவர் நமக்கு வழிகாட்டியாக உள்ளார். அவர் வழியில் கழகத்தினர் கருத்து வேறுபாடுகள் மறந்து ஒற்றுமையாக கழக வளர்ச்சி பணியில் ஈடுப்பட வேண்டும் என்றார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்: எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு தலைமை! திருச்சி குண்டுபிலால் முன்னிலை!

# சவுதி அரேபியா அயலக அணி கலந்தாலோசனைக் கூட்டம்!

## தொழிலதிபர் அப்துல் மஜீத் பதுருதீன் சிறப்புரை!

தமாம், ஜூன் 10 - முத்தமிழறிஞர் கலைஞரின்102வது பிறந்தநாளை முன்னிட்டு சவூதி அரேபியா திமுக அயலக அணியின் கிழக்கு மாகாண கலந்தாலோசனைக் கூட்டம், ஜூன் 3, 2025 அன்று சவூதி அரேபியா கிழக்கு மாகாணம் ஜுபைலில் தி.மு.க. அயலக அணி கிழக்கு மாகாண அமைப்பாளர் எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தி.மு.க. அயலக அணியின் கிழக்கு மாகாண துணை அமைப்பாளர் திருச்சி குண்டு பிலால் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக சவூதி அரேபியா யூனிவர்சல் இன்ஸ்பெக்சன் கம்பெனி லிமிடெட்" நிறுவனரும் தொழில் அதிபருமான, ஐந்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ள அப்துல் மஜீத் பதுருதீன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தி.மு.க. அயலக அணியின் கிழக்கு மாகாண துணை அமைப்பாளர்கள் முஹம்மது ஜியா, அப்துல் சமது, மற்றும் ஃபரீதா, முஹமது யாசீன், நாஞ்சில் மகேஷ், சத்ய மூர்த்தி, வினோத், முஹமது நிசார், அசார், அன்சாரி, சத்தார், ராபர்ட், ராபின், இம்ரான், ஜிகர் தண்டா சாதிக், பஷீர், அஷ்ரஃப், சபரிகாந்த் ராஜா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தலைவர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு இரத்த தானம் செய்வது , 2026 தேர்தலுக்கு பிரச்சாரம் செய்வது, போன்ற பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு நன்றி கூறினார். சவூதி அரேபியா கிழக்கு மாகாணம் தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர் திருச்சி குண்டு பிலால் இரத்த தானம் செய்தார்.



தங்கவயல் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கலைஞரியின் 102 வது பிறந்த நாள் விழா இராபர்ட் சன்பேட்டை, பி ரிச்சர்ட் சாலையில் உள்ள கழக அலுவலகமாக கலைஞரகத்தில் வழக்கறிஞர் டேவிட் தலைமையில், சீனிவாசன், ஜீவானந்தம், டிரைவர் ரவி ஆகியோர் முன்னிலையில் நடந்தது. பொறுப்புக் குழு உறுப்பினர் நாத்திகம் என்.எஸ்.ஸ்ரீதர் உரையாற்றினார். கழக கொடியை மூத்த உறுப்பினர் விஸ்வ நாதன் ஏற்றினார். கலைஞர் திருவுருவ படத்திற்கு முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் கு.ஆதித்தன் மாலை அணிவித்தார். பொற்செழியன், ஏ.வீ.இளங்கோவன் ஆகியோர் இனிப்பு வழங்கினர். வி.கார்த்திக் வரவேற்றார். குமார் நன்றி கூறினார்.



முத்தமிழ் அறிஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒண்டிக்கடை ரவுண்டான பகுதியில் அலங்கரிக்கப்பட்ட கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகளை ஒன்றிய செயலாளர் ராஜா (எ) ராஜேந்திரன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முருகேசன், புஷ்பராணி கருணாநிதி, சித்தேஸ்வரன், மீசை வெங்கடாசலம், அருணாசலம், சின்னத்தம்பி, தங்க மஸ்தான், சார்லஸ்பாய், சுப்பையா, மற்றும் சேலம் கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் ஏ.டி. பாலு, ராமச்சந்திரன், சேகர், சின்னவெள்ளை, சென்றாயன், செந்தில் பிரபு, சின்னசாமி, குணசேகரன், ஜெயசீலன், செஞ்சிமாணிக்கம், ஜோசப், பில்லேரி செல்வம், சரவணன், ஆதிசங்கர், ஜெகா, ஹென்றி, கார்த்திக், இளையராஜா, ஜிம் வெங்கடேஷ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஜெ. அன்பழகன்

### ஜூன் 10 (2020)



மிசா பழக்கடை ஜெயராமன் மகனான இவர், தனது பள்ளிப் பருவம் முதலே தீவிர கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் தியாகராயர் நகர் பகுதியில் சார்பு மன்றச் செயலாளர், பகுதி பிரதிநிதி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், பகுதிக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர் என படிப்படியாக, சார்பு மன்ற செயலாளர் முதல் மாவட்டச் செயலாளர் வரை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் சென்னை மாவட்ட தளகர்த்தர்களில் ஒருவராக விளங்கியதோடு, கலைஞர் அவர்களைத் தனது தந்தையின் இடத்தில் வைத்துப் போற்றியவர். தியாகராயர் நகர் பகுதியிலும், ஒருங்கிணைந்த தென்சென்னை மாவட்டத்திலும், பிறகு சென்னை மேற்கு மாவட்டத்திலும் கழகத்திற்குச் சிறப்பாக வலுவூட்டியவர்.

கழகத் தலைவர் அவர்கள் இளைஞரணிச் செயலாளராக இருந்த காலம்தொட்டே அவரது நம்பிக்கை மிகுந்த உடன்பிறப்பாக, கொள்கைத் தோழனாக, இயக்கத்தின் இலட்சிய சகோதரன் என்கிற உணர்வுடன் நெருங்கிப் பழகியவர்.

2001 தியாகராயர்நகர் தொகுதியிலும், 2011, 2016களில் சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.

1976ல் இந்திராகாந்திக்கு கருப்பு கொடி காட்ட திட்டமிட்டதாக கைது மற்றும் 1986ல் சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி திணிப்பு போராட்டம், விலைவாசி போராட்டம் என கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, அப்போராட்டங்களை முன்னெடுத்து வெற்றிபெற பாடுபட்டவர்.

“மக்கள் பணியிலேயே தன்னுயிர் ஈந்த அன்புச் சகோதரர் ஜெ.அன்பழகனின் பொதுவாழ்வு – கழகப்பணி – தியாக உணர்வுக்குத் தலைவணங்கி, கண்ணீர் பெருக்குவதன்றி, வேறு வழி எனக்குத் தெரியவில்லை” என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**